செயலாக்கக்குழு அமைக்கப்பட்டுள்ளது. மாநில அளவிலான பேரிடர் மேலாண்மை திட்டங்களை செயல்படுத்துவதும், பேரிடர் மேலாண்மை நிவாரண நிதியை கையாள்வதும் அது குறித்து மாநில அரசுக்கு ஆலோசனைகள் வழங்குவதும் மாநில செயலாக்க குழுவின் முக்கிய பணிகளில் ஒன்றாகும். இக்குழு பேரிடர் காலங்களில் மேற்கொள்ளப்படும் உடனடி நிவாரண பணிகளுக்கு மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்வதற்கு அதிகாரம் பெற்றுள்ளது. தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம், முதலமைச்சர் தலைமையின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

உறுப்பினர்களின் விவரம்

- மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர், பதவி வழி உறுப்பினர்
- அரசு தலைமைச் செயலாளர், பதவி வழி உறுப்பினர்
- வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை செயலாளர்
- உள் துறை செயலாளர்
- நிதித் துறை செயலாளர்
- மாநில நிவாரண ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர்
- சென்னை, அண்ணா பல்கலைக்கழகத்தின் பேரிடர் மேலாண்மை மற்றும் தணிப்பு மையத்தின் இயக்குநர்.
- சென்னையிலுள்ள இந்திய தொழில்நுட்ப கழகத்தின் கட்டட பொறியியல் துறையின் தலைவர்.

இவ்வாணையமானது பல்வகை பேரிடர் மேலாண்மை தொடர்பான கொள்கை உருவாக்கத்திற்கு வழிகாட்டுதல், மாநில

இவ்வாணையமானது பல்வகை பேரிடர் மேலாண்மை தொடர்பான கொள்கை உருவாக்கத்திற்கு வழிகாட்டுதல், மாநில பேரிடர் மேலாண்மை திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தல் மற்றும் பேரிடர் அபாய குறைப்பு நடவடிக்கைகள் தொடர்பான அனைத்து முக்கிய செயல்பாடுகளை கண்காணித்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

### தமிழக அரசின் மாநில செயலாக்க குழு

தமிழக அரசின் மாநில செயலாக்குழு தலைமைச் செயலாளரை தலைவராகவும் கீழ்க்கண்ட உறுப்பினர்களை கொண்டும் அமைக்கப்பட்டுள்ளது,

- வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை,
- நிதித்துறை செயலாளர்,
- பொதுப்பணித் துறை செயலாளர்,
- நெடுஞ்சாலைத்துறை செயலாளர்,
- உள்துறைகளின் செயலாளர்
- மேற்படி, குழுவின் கூட்டத்தில் மாநில நிவாரண ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொள்வார்.

### மாநில அறிவுரைக் குழு

தமிழ்நாடு அரசால் மாநில நிவாரண ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களை தலைவராகவும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் செயலாளர் அவர்களை இணை தலைவராகவும் கொண்டு மாநில அறிவுரைக்குழு அமைக்கப்பட்டுள்ளது இக்குழுவானது தொலை உணர்வு, தகவல் தொடர்பு, வானிலை முன்னறிவிப்பு, தரைத்தள போக்குவரத்து பொறியியல், நகர்புற குடிநீர் விநியோகம் மற்றும் கழிவுநீர் அகற்றல், பொது சுகாதாரம், ஊரகப் பகுதி குடிநீர் விநியோகம், கடல் அறிவியல், வானவியல் மற்றும்

கடல் அறிவியல், வானவியல் மற்றும் பருவமாற்றம், வறட்சி மேலாண்மை, நெடுஞ்சாலை, தொழில் துறை பாதுகாப்பு மற்றும் சுகாதார நிபுணர், பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து, பெட்ரோலியம் மற்றும் வெடிபொருள் பாதுகாப்பு, வன பாதுகாப்பு மற்றும் காட்டுத் தீ, வெள்ளம் மற்றும் பாசன மேலாண்மை, மின்சார பரிமாற்றம், நீர்வள மேலாண்மை மற்றும் சுற்றுச்சூழல் ஆகிய துறை வல்லுநர்களை உறுப்பினர்களை கொண்டு மாநில அளவில் பேரிடர் அபாய தணிப்பு குறித்த ஆலோசனைகளை வழங்கி வருகிறது.

#### தமிழ்நாடு மாநில பேரிடர் அபாய தணிப்பு முகமை

தமிழ்நாடு அரசு தனது அரசாணை எண்.488, வருவாய் ஸபேரிடர் மேலாண்மை-ஐ (2)] துறை, நாள்:28.11.2013 மூலம் தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை முகமை அமைக்கவும் அதனை தமிழ்நாடு சங்கங்களின் பதிவு சட்டத்தின் கீழ் செய்யவும் ஆணைப்பிறப்பித்தது. அதனடிப்படையில் தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை முகமை உருவாக்கப்பட்டு தமிழ்நாடு சங்கங்களின் பதிவு சட்டம் 1975-ன் கீழ் 09.01.2014 அன்று பதிவு எண்.2/2014-ன் படி பதிவு செய்யப்பட்டது.இம்முகமையானது, தமிழ்நாடு அரசு அரசாணை எண். 234 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை -ஐ (2)] துறை நாள்: 26.06.2018-ல் தமிழ்நாடு பேரிடர் அபாய தணிப்பு முகமையாக பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இம்முகமை பல்வகை பேரிடர் தொடர்பான நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் பணியில் மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் செயலாக்க முகமையாக செயல்படுகின்றது.

- பேரிடர் நிகழ்வின் போதும், பின்னரும் மீட்புப்பணிகள் மற்றும் நிவாரணம் வழங்குதல் போன்றவற்றில் மாவட்ட நிர்வாகத்திற்கு வழிகாட்டுதல்.
- பேரிடர் மேலாண்மை தொடர்பான புள்ளி விவரங்கள், பயிற்சி அளிக்கப்பட்ட மீட்புப்படை அமைப்பினர், வல்லுநர்கள், அரசு சாரா அமைப்புகள் மற்றும் சமுதாயம் சார்ந்த அமைப்புகள் போன்றவற்றின் தகவல் களஞ்சியமாக செயல்பட்டு வருகிறது.
- பேரிடர் மேலாண்மை மற்றும் தணிப்பு குறித்த திறன் மேம்பாடு, பயிற்சி மற்றும் விழிப்புணர்வு தொடர்பான செயல்பாடுகள் மேற்கொள்ளுதல்
- அரசுக்கு தொழில்நுட்ப உதவிகள் மற்றும் செயல்பாடுகள் குறித்த ஆலோசனைகளை அளித்தல்.
- இயற்கை பேரிடர் நிகழ்வுகளினால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் இழப்புகளுக்கான காரணங்கள் குறித்து ஆராய்ச்சிகள் மேற்கொண்டு அவற்றை தணிக்க உரிய வழிமுறைகளை தெரிவித்தல் .
- எவ்வகையான பேரிடர்களை எதிர்கொள்ள தேவையான அணுகுமுறைகள், கோட்பாடுகள், திட்ட வழிமுறைகள் மேலாண்மை குறித்த செயல்திட்டம் வகுத்தல்.
- பேரிடர் மேலாண்மை தொடர்பான பிற நிதி நிறுவன உதவிகளுடன் மேற்கொள்ளப்படும் திட்டங்களை செயல்படுத்த திட்டங்கள் வகுத்தல்.
- மறுசீரமைப்பு மற்றும் மறுகுடியமர்வு ஆகிய நடவடிக்கைகளுக்குத் தேவையான நிதியையோ நிதி உதவியையோ அல்லது

- மறுசீரமைப்பு மற்றும் மறுகுடியமர்வு ஆகிய நடவடிக்கைகளுக்குத் தேவையான நிதியையோ நிதி உதவியையோ அல்லது கடனாகவோ தமிழ்நாடு அரசு, இந்திய அரசு, உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐக்கிய நாடுகளின் முகமைகள், செஞ்சிலுவை சங்கம், நன்கொடையாளர்கள், மற்றும் இதர தனியார் நிறுவனங்களிலிருந்து பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.
- இம்முகமை அமைக்கப்பட்டதற்கான நோக்கம் நிறைவேற உரிய நிதியுதவியை பெற ஏற்பாடுகள் செய்தல். நில உடைமைகள், கட்டிட உடைமைகள், தளவாடங்கள், கட்டிட சேதாரங்கள் போன்றவற்றை விற்பதனால் ஏற்படும் நிதியை மேலாண்மை செய்யவும், நிர்வகிக்கவும், மறுமூலதனம் செய்யவும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளல்.

இம்முகமை மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் அவர்களை தலைவராக கொண்ட ஆட்சிக் குழுவால் வழி நடத்தப்படுகின்றது. வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் இம்முகமையின் செயற் குழுவின் தலைவராகவும், பேரிடர் மேலாண்மை ஆணையர் உறுப்பினர் செயலராகவும் செயல்பட்டு வருகின்றனர். வருவாய் நிருவாக ஆணையர் / மாநில நிவாரண ஆணையரின் முழுக் கண்காணிப்பில் இயங்கும் இம்முகமையானது மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் செயலாக்க முகமையாக செயல்படுகின்றது.

### ஆட்சிக்குழு

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களை தலைவராகவும், தலைமைச்செயலாளர் மற்றும் வருவாய்

## ஆட்சிக்குழு

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களை தலைவராகவும் தலைமைச்செயலாளர் மற்றும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை செயலாளர்களை துணை தலைவர்களாகவும் மற்றும் 14 துறைகளின் செயலாளர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட ஆட்சி குழுவின் முழு கண்காணிப்பில் மாநில பேரிடர் அபாய தணிப்பு முகமை இயங்கி வருகிறது. மாநில நிவாரண ஆணையர் / வருவாய் நிர்வாக ஆணையர் இக்குழுவினை கூட்டுபவராக செயல்பட்டு வருகிறார்.

## செயற்குழு

மேலும், மாநில நிவாரண ஆணையர் / வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களை தலைவராகவும் மற்றும் 9 உறுப்பினர்களையும், ஆணையர் / இயக்குநர் பேரிடர் மேலாண்மை அவர்களை உறுப்பினர் செயலாராகவும் கொண்டு மாநில பேரிடர் அபாய தணிப்பு முகமையின் செயற்குழுவாக அமைக்கப்பட்டு இயங்கிவருகிறது.

பேரிடர் மேலாண்மை நடவடிக்கைகள் தொடர்பான ஒருங்கிணைப்புஅமைப்புகள்

## தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம்

தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் பேரிடர் மேலாண்மை தொடர்பான கொள்கைகளை ஏற்படுத்துவதற்கும், திட்டங்கள் தீட்டுவதற்கும், வழிமுறைகள் தெரிவிப்பதற்கும் இந்திய அரசு மட்டத்தில் தலையாய அமைப்பாகும். இவ்வாறு தெரிவிக்கப்படும் பேரிடர் மேலாண்மைத் துறை வழிமுறைகள் மைய அமைச்சகங்களின் துறைகளுக்கும், மாநில அரசுக்கும் அவர்களின் திட்டங்களை வகுக்க பெரிதும் உதவுகிறது. மேலும்,

வகுக்க பெரிதும் உதவுகிறது. மேலும், இவ்வாணையம் தேசிய பேரிடர் மேலாண்மை திட்டம் சார்ந்த துறைகளின் திட்டங்களுக்கும் ஒப்புதல் அளித்து வருகிறது. இவ்வாணையம் மேலும் பேரிடர் தணிப்பு நடவடிக்கைகளுக்கும், ஆயத்த நிலை ஏற்பாட்டு நடவடிக்கைகளுக்கும் தேவையான நிதி ஒதுக்கப்படுவதை கண்காணிக்கிறது, மேலும் அயல் நாடுகளில் ஏற்படும் பேரிடர் நிகழ்வின் போது தேசிய அளவில் தேவையான உதவிகளை முடிவெடுத்து வழங்கிவருகிறது.

## இந்திய வானிலை ஆராய்ச்சித்துறை

இந்திய வானிலை ஆராய்ச்சித்துறை வானிலை, பருவகாலமாற்றங்கள், பருவ நிலை தொடர்பான எச்சரிக்கைகள் தொடர்பான செய்தி அறிக்கைகளை பேரிடர் மேலாண்மை அலுவலர்களுக்கு ஆயத்த நிலை ஏற்பாடுகள் மேற்கொள்ளும் பொருட்டு வெளியிட்டு வருகின்றது. இந்த துறையானது பருவ மாற்றங்களை கண்டறிந்து, முன் அறிவிப்புகளையும் தெரிவித்து வருகின்றது. புயல் மற்றும் வெள்ளக் காலங்களில் மாநில அரசு மண்டல வானிலை ஆராய்ச்சி மையத்துடன் முன்னறிவிப்புகள் குறித்து நெருங்கிய தொடர்பு கொண்டு வருகிறது. ரிக்டர் அளவு 3.0-க்கு மேல் ஏற்படும் நில அதிர்வு பற்றியுமான முன்னெச்சரிக்கை அறிக்கைகள் இந்திய வானிலை ஆராய்ச்சித்துறை மாநில அரசுக்கு உடனுக்குடன் தெரிவித்து வருகிறது.

## இந்திய தேசிய கடல்சார் தகவல்கள் மையம்

இந்திய தேசிய கடல்சார் தகவல்கள் மையம், இந்திய அரசின் புவியியல் துறையை சார்ந்த தேசிய அமைப்பாகும். இம்மையமானது கடற்கரை மற்றும் கடல் சார்ந்த தகவல்களை மீன்பித்தொழில், கப்பல் போக்குவரத்து, பருவ நிலை, சூற்றுச்சூழல் கடற்கரை மற்றும்

வேறுபாடு, கடல் மேல்மட்ட வெப்பநிலை மற்றும் பவழப்பாறைகள் படிவுகள், அலையாத்தி காடுகள், கடற்கரை மாற்ற நிகழ்வுகள் பற்றிய தகவல்கள் பரிமாற்றத்திற்கு வழிவகை செய்கிறது. இம்மையம் ஏற்கனவே நில அதிர்வினால் ஏற்பட வாய்புள்ள சுனாமி குறித்து முன்னெச்சரிக்கைகளையும் வழங்கி வருகின்றது.

**தேசிய பேரிடர் உணர்வு மையம்**

தொலை உணர்வு மற்றும் விண்வெளி தகவல்களை பகுதிகள் சார்ந்த மற்றும் பகுதிகள் சாரா படங்களாக தெரிவிக்கும் பணியின் செயலாக்க மையமாக இந்திய அரசின் விண்வெளித்துறையை சார்ந்த தேசிய தொலை உணர்வு மையம் இருந்து வருகிறது. இம்மையத்திலிருந்து பெயரிடப்படும் தொலை உணர்வு தகவல்கள் மற்றும் படங்கள், இயற்கை வளங்களை நிர்வகிப்பதிலும், பேரிடர் மேலாண்மையிலும், வெள்ள மேலாண்மையிலும் முக்கியபங்கு வகிக்கின்றன. அண்மையில் தேசிய தொலை உணர்வு மையம் கிராம அளவில் பேரிடர் மேலாண்மை செய்ய கைப்பேசி செயலி ஒன்றை உருவாக்கி உள்ளனர்.

**கட்டிட கட்டுமான பொருட்கள் மற்றும் கட்டுமான தொழில்நுட்ப குழு**

மத்திய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்புற வறுமை ஒழிப்பு துறையைச் சார்ந்த கட்டிட கட்டுமான பொருட்கள் மற்றும் கட்டுமான தொழில்நுட்பகுழு பேரிடர் பாதிப்புகள். ஏற்படாத வகையில் பொருத்தமான கட்டுமான பொருட்கள் குறித்தும் தொழில்நுட்பம் குறித்தும் எளிய வழிமுறைகளை குடிமக்களுக்கு அளித்து வருகின்றது.

### இந்திய தரக்கட்டுபாடு குழுமம்

நில அதிர்வுகளை தாங்கும் வகையிலான கட்டுமான தரங்களை அந்த நில அதிர்வு தாக்கத்திற்கான பகுதிகளுக்கு உகந்த கட்டுமான வழிமுறைகள் என்று இக்குழுமம் வழங்கி வருகிறது. இதன் அடிப்படையில் கட்டுமான விதிமுறைகள் ஏற்படுத்தப்பட்டு நகர் மற்றும் ஊரக திட்டமிடல் இயக்குனரகங்கள் மூலமாக பின்பற்றப்படுகின்றன.

### இந்திய தொழில்நுட்ப கழகம், சென்னை

சென்னையிலுள்ள இந்திய தொழில்நுட்ப கழகம் உயர் தொழில்நுட்பக் கல்வி மற்றும் செயலாக்க ஆராய்ச்சி துறையில் தேசிய அளவில் ஒரு முன்னோடி நிலையமாக உள்ளது. இந்நிலையம் பதினாறு கல்வி துறைகளுடன் சில செயல்முறை சார்ந்த முன்னோடி ஆராய்ச்சி மையங்களுடனும், பொது அறிவியல் மற்றும் பொறியியல் துறைகளின் நூறு ஆய்வகங்களுடனும் இயங்கி வருகிறது.

### அண்ணா பல்கலைக்கழகம்

வேளாண்மை, நில பயன்பாடு, தரிசு நில மேம்பாடு, வனவளம், பேரிடர் அபாயம் தணிப்பு பருவ நிலை மாற்றம், கடல் சார் நிகழ்வு கண்காணிப்பு ஆகியவைகளுக்கு தொலை உணர்வு மற்றும் விண்வெளி ஆராய்ச்சி சம்மந்தமான புவிசார் தொழில் நுட்பங்களை வழங்க வருகிறது.

### தேசிய கடல் ஆராய்ச்சி நிலையம்

இந்நிலையம் கடற்கரை மற்றும் கடல்சார் நிகழ்வுகள் குறித்த ஆராய்ச்சி மேற்கொண்டு தகவல்கள் வழங்கும் வகையில் செயல்பட்டு வருகின்றது.